
# கிருபையை பற்றிக்கொண்டவர்கள் - பாகம் 1 - சகேயு




இதற்கு முன்பு தியானித்த தியானங்களில், கிருபையை போக்கடித்தவர்கள் பற்றி கண்டோம். இவர்கள் தேவன் தங்களுக்கு கிருபையாய் தந்தருளின மேன்மையான ஆசீர்வாதங்கள், நன்மைகள், இரட்சிப்பு, அதிகாரங்கள் ஆகியவற்றை அற்ப காரணங்களுக்காக இழந்து போனதை தியானிதோம். அதே வேளையில் தேவன் தங்கள் வாழ்வில் கொடுத்த ஒரு சிறு கிருபையை, அருமையாய் பயன்படுத்தி மேன்மையான காரியங்களை கண்டடைந்தவர்களும் உண்டு. அவர்களை பற்றி நாம் இப்பொழுது தியானிப்போம். தேவன் பல்வேறு விதங்களில் ஒரு தனி மனிதனின் வாழ்வில் இடைப்பட்டு, தமது கிருபையை அவனுக்கு வெளிப்படுத்தி காண்பிக்கிறார். அதை சரியாய் உணர்ந்து கொண்டவர்கள், பற்றி பிடித்துக் கொண்டவர்கள் தங்கள் வாழ்வில் அருமையான காரியங்களை இறைவனிடம் இருந்து பெற்றுக் கொள்கின்றனர். அவ்வாறாக பெற்றுக் கொண்டதன் மூலம், அவர்கள் வாழ்க்கையே தலைகீழாக மாறிவிடுகிறது. இருளின் அதிகாரத்தில் இருந்த அவர்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் மாறிவிடுகின்றனர். அப்படிப்பட்டவர்களின் ஒருவர் தான் நாம் **லூக்கா 19** ஆம் அதிகாரத்தில் காணும் சகேயு ஆகும். சகேயுவை குறித்த சம்பவம் **லூக்கா 19:1-10** வசனங்களில் மிக சுருக்கமாய் கூறப்பட்டிருந்தாலும், ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவிடம் அவர் பெற்றுக் கொண்டது மிக மேன்மையான ஒன்றாகும். ஆம், **“இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு**

**இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே. இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.“ (லூக்கா 19:9,10)** என்று சகேயுவை குறித்து கூறினார்.

இதற்காக அவர் செய்தது என்ன என்பதை பின் வருமாறு தியானிப்போம். **லூக்கா 19:1** ஆம் வசனம் கூறுகிறது **“அவர் எரிகோவில் பிரவேசித்து, அதின் வழியாக நடந்துபோகையில்,“**. ஆம் இதே எரிகோவில் வாழ்ந்த, அந்நிய பெண்ணாகிய, வேசியாகிய ராகாபுக்கு, பழைய ஏற்பாட்டு காலத்தில், ஒரு சிறு கீழ்ப்படிதலின் மூலம் மிகப்பெரிய இரட்சிப்பு கிடைத்தது. அது மட்டுமல்லாமல் **மத்தேயு 1:5** இல் கூறப்பட்டுள்ள, ஆண்டவருடைய சந்ததியின் அட்டவணையில், அவளுடைய பெயரும் இடம் பெற்றது. இன்று அதே எரிகோவின் வழியாய் மற்றொரு முறை ஆண்டவர் கடந்து செல்கிறார். **லூக்கா 19:2** ஆம் வசனம் கூறுகிறது **“ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன்,“** என்று. ஆம் சகேயு யூதராய் இருந்தும், யூத மக்களின் வரிப்பணத்தை, அவர்களை ஆளும் ரோம அரசிடம் சேர்க்கும், வரி வசூலிக்கும் உத்தியோகத்தில் இருந்தபடியினால், அக்காலத்தில் யூதர்கள் இப்படியாக ரோமா அரசாங்கத்திற்காக வேலை செய்பவரை பாவிகளுக்கு நிகராகவே பார்த்தனர். காரணம் சொந்த நாட்டு மக்களுக்கு எதிராகவே அவர்கள் செயல்பட்டதால்தான். அதிலும் சகேயு, அப்படிப்பட்ட ஆயக்காரர்களுக்கு எல்லாம் தலைவனாக வேறு இருந்தார். இதனால் அநியாய வரியின் மூலம், தேவனுக்கு காணிக்கையாக செல்ல வேண்டிய இஸ்ரவேலரின் செல்வங்களை, ரோம அரசாங்கத்திற்கு சென்று சேர்த்ததால் சகேயுவை அனைவரும் பகைத்தனர். ஆனால் இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்த சகேயுவோ, ஐஸ்வர்யவானாய், ரோம அரசாங்கத்தின் செல்வாக்கு பெற்றவராய் இருந்தார். எனவே சாதாரண யூதர்கள் இப்படிப்பட்டவர்களை பகைத்து, அவர்களுடைய வீடுகளுக்கு செல்வதை கூட தவிர்த்து வந்தனர். அதே நேரத்தில் இவை எதை குறித்தும் சகேயு கவலைப்படாமல், ஐஸ்வர்யத்தை குறித்தும், ரோம அரசாங்கத்தின் மூலம் தனக்கு கிடைத்த ஆயக்காரர்களுக்கு தலைவன் என்ற அதிகாரத்தைக் குறித்தும், திருப்தி அடைந்தவராய் வாழ்ந்து வந்தார். இப்படிப்பட்ட சூழ்நிலை மத்தியிலேயே இயேசு அவர் இருக்கும் ஊர் வழியாய் கடந்து சென்றார்.

**லூக்கா 19:3,4** வசனங்களில் **“இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவன் குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல், அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான்.“**. ஆம்,

சகேயுவுக்கு ஒரு சின்ன ஆசை ஏற்படுகிறது. அவர், இயேசு எப்படிப்பட்டவரோ என்று காண விரும்பினார். இவ்வளவு காலம் தன் ஐஸ்வர்யம், அதிகாரம், ஆகியவற்றில் திருப்தி கொண்டு, தன் சொந்த மக்களை கூட ஒரு பொருட்டாக எண்ணாமல், தேவ நியமித்தற்கு எதிராக, வரி வசூல் செய்து அதை அந்நியர்களுக்கு (ரோமர்) கொண்டு சேர்த்து வந்த சகேயு, அவரைக் காண ஆசையாய், அவருக்கு முன்னதாக ஓடி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினார். இங்கு அவர் இயேசுவை தன் வீட்டிற்கு அழைக்கவோ அல்லது அவரிடம் இருந்து ஏதோ ஒரு நன்மையை பெறவோ விரும்பவில்லை. அவர் எண்ணியதெல்லாம், அவரை கண்ணார காண வேண்டும் அவ்வளவுதான். இங்கு அவர் இருதயத்தில் தோன்றிய இந்த நல்ல எண்ணமும், அதற்கு அவர் முயற்சித்து காட்டத்தி மரத்தில் ஏறியதும், அவர் வீட்டிற்கு இரட்சிப்பை கொண்டு வந்தது. ஆம் அவர் மற்றவர்களைப் போல இயேசுவை நோக்கி கூட கூப்பிடவில்லை. அவர் தன்னை காண வேண்டும் என்று கூட அவர் நினைக்கவில்லை. தன் கண்கள் மட்டும் அவரைக் கண்டால் போதும் என்று எண்ணினார். ஆனால் உண்மையில் அவர் உள்ளத்தில் இருந்ததை தேவன் அறிந்தார்.

**லூக்கா 19:5** கூறுகிறது **"இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்து பார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார்."**, இங்கு இயேசு அண்ணாந்து பார்த்து என்ற வார்த்தை சகேயு அவர் கண்களுக்கு முன் வரவில்லை, ஆனால் ஆண்டவர் இயேசுவின் கண்கள் அவரை நோக்கிச் சென்றது. சென்றது மட்டுமல்லாமல் அவர் பெயரை சொல்லி கூப்பிட்டது, கூப்பிட்டது மட்டுமல்லாமல் நான் உன் வீட்டில் தங்க வேண்டும் என்றும் கூறியது. இந்த வார்த்தைகள் ஆண்டவர், சகேயுவின் இரட்சிப்பிற்கான இந்த நாளை குறித்து விட்டார் என்பது விளக்குகிறது. இந்த ஒரு சிறு தருணத்தை (கிருபையை) சகேயு பற்றி பிடித்துக்கொண்டார். **லூக்கா 19:6** ஆம் வசனம் கூறுகிறது **"அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டுபோனான்."**. ஆம், ஆண்டவர் கூறியபடியே சீக்கிரமாய் இறங்கி வந்து அவரை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். ஆனால் **லூக்கா 19:7** ஆம் வசனத்தில் **"அதைக் கண்ட யாவரும்: இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள்."**. இங்கு ஆண்டவரை பின்பற்றி வந்த மக்களிடமே முறுமுறுப்பு உண்டாகிறது. ஆம் அனைவராலும் பகைக்கப்பட்டு, ரோம அரசாங்கத்திற்காக வேலை செய்யும் சகேயு வீட்டிற்கு ஆண்டவர் ஏன் செல்ல வேண்டும் என்பது அனைவருக்கும் கேள்விக்குறியாக இருந்தது. ஆனால் ஆண்டவரோ அதற்கான பதிலை சகேயுவின் மூலமாகவே கூற செய்தார். **லூக்கா 19:8** ஆம் வசனம் கூறுகிறது **"சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என்**

**ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்.**".

ஆம் எந்த செல்வத்தின் மீது ஆசை வைத்து, தன் சொந்த சகோதரர்களான இஸ்ரவேலருக்கு எதிராக வாழ்ந்து வந்தாரோ, இன்று அதே செல்வத்தை தன் மக்களுக்கே கொடுக்க முன்வந்தார். மேலும் அந்த செல்வத்தை சேர்த்ததில் ஏதேனும் தவறு இருக்குமானால், அதையும் சரி செய்வேன் என்று கூறினார். இங்கு அவர் வேறு எதைக் குறித்தும் ஆண்டவரிடம் கூறவில்லை, அவர் ஒன்றை அறிந்து கொண்டார் தன்னிடம் உள்ள பண ஆசையே, தன் பாவம் என்பதை அறிக்கையிட்டு, அதை சரி செய்ய அவர் உடனே முன்வந்ததின் மூலம், நாம் ஏற்கனவே **லூக்கா 19:9** ஆம் வசனத்தில் வாசித்தது போல "**இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே.**", என்றார். ஆண்டவர் இங்கு சகேயுவை மட்டும் மன்னிக்கவில்லை, அவன் வீட்டார் அனைவருக்கும் மன்னிப்பை கட்டளையிட்டு, இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது என்றார். மேலும் ஆபிரகாமிற்கு தேவனால் உண்டான ஆசீர்வாதத்திற்கு, சகேயுவும் பங்கு உரியவராயிருக்கிறார் என்பதையும் உறுதிப்படுத்தினார். மேலும் **லூக்கா 19:10** ஆம் வசனத்தில் "**இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.**". ஆம் காணாமல் போன ஆட்டைப் போலத்தான் சகேயுவும் இருந்தார். ஆனால், ஆண்டவர் அவரை தேடி வந்த போது, தன் மேய்ப்பன் சத்தம் கேட்டு, அவரிடம் ஓடி வந்து இரட்சிப்பை பெற்றார். ஒரு சில மணி நேரத்தில் அவருடைய வாழ்க்கை முழுவதும் மாறிற்று.

ஆண்டவர் சகேயுவிடம் ஐஸ்வர்யத்தை குறித்தோ, அவர் பாவியென்றோ கூட கூறவில்லை. ஆனால், அதற்கு பதிலாக நான் உன் வீட்டிலே தங்க வேண்டும் என்றே கூறினார். ஆனால் இப்படிப்பட்ட ஆண்டவர் தன் வீட்டில் தங்க வேண்டும் என்றால், தன் வீடு (வாழ்வு) எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை சகேயு உணர்ந்தார். அதை உணர்ந்தது மட்டுமல்ல, உடனே அதை ஆண்டவரிடம் அறிக்கையும் இட்டார். இப்படியாக தனக்கு கிடைத்த ஒரு சிறு தருணத்தை (கிருபையை) சரியாக பயன்படுத்தி, எந்த வீட்டில் ஆண்டவர் தங்க வேண்டும் என்றாரோ, அந்த வீட்டை இரட்சிப்பிற்கு ஏற்றதாய் மாற்றினார். இங்கு அவர் வாழ்க்கை மாத்திரமல்ல, அவருடைய வீட்டார் அனைவரின் வாழ்க்கையும் மாற்றமடைந்திருக்கும். அது மட்டுமல்ல யாருமே போக விரும்பாத அவர் வீட்டிற்கு, இயேசு வந்து இரட்சிப்பை வழங்கிய பின்பு, தேவ ஜனங்கள் அனைவரும் தங்கிச்செல்லும்

இரட்சிப்பின் வீடாய், வானத்தின் வாசலாய் அது மாறி போயிற்று. எனவே இப்படிப்பட்ட ஒரு சிறிய கிருபையான தருணத்தை அருமையாக பயன்படுத்திக்கொண்ட சகேயு நம்மெல்லாருக்கும் ஒரு முன்மாதிரியாய் உள்ளார். நாமும் ஆண்டவர் நமக்கு தரும் இப்படிப்பட்ட தருணங்களை பயன்படுத்தி, விட வேண்டியவைகளை விட்டு, பெற வேண்டியவைகளை பெற்று, ஆண்டவர் மந்தையில் மகிழ்ந்திருப்போமாக. ஆமென், அல்லேலுயா.